SPL.C.C.No. 1/2025 தேதி. 18.09.2025.

அ.சா.13 – பூமிநாதன்

1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி –

அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் சிசிடிவி அமைப்பு பொருத்தப்பட்ட விபரம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தபிறகு எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. சிசிடிவி பதிவுகள் புலன்விசாரணை மற்றும் சாட்சி விசாரணைக்கு முக்கிய தடயம், மற்றும் சாட்சியம் என்று சொன்னால் சரிதான். 14.12.2012 முதல் அரசாணை எண் 113 ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் பிரிவு மூலம் அனைத்து நகராட்சிகளிலும் சிசிடிவி அமைப்பு பொருத்துவதற்கு உத்தரவிடப்பட்டது குறித்து எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. அதன் பின்தொடர்ச்சியாக விதிமுறைகளும் வகுக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. மேற்படி விபரங்கள் எனக்குத் தெரியும் என்றாலும் வழக்கு விசாரணைக்கு பாதகமாக இருக்கும் என்பதால் அதனை மறைத்து சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

விருதுநகர் ஊழல் தடுப்பு அலுவலகத்திலிருந்து நாங்கள் புறப்படுவதற்கு முன்பாக நாங்கள் என்ன என்ன உபகரணங்களை எடுத்துச்சென்றோம் என்றால் பினாப்தலின் பவுடரை தவிர சம்பவ இடத்திற்கு தேவைப்படக்கூடிய மடிக்கணினிகள், பிரிண்டர் உட்பட 180 மிலி பிடிக்கக்கூடிய கண்ணாடி பாட்டில் மற்றும் கண்ணாடி டம்ளர் உட்பட பொருட்களை எடுத்துச்சென்றோம். ஏற்கனவே மாதிரி கரைசல் தயார் செய்யப்பட்டு உபயோகிக்கப்பட்ட கண்ணாடி டம்ளரை நகராட்சி அலுவலகத்திற்கு செல்லும்போது எடுத்துச்சென்றோமா என்றால் எடுத்துச்சென்றோம். சுத்தமான முறையில் முறையாக சுத்தம் செய்து எடுத்துச்சென்றோம். மேற்கூறிய பொருட்களை எடுத்துச்சென்றது குறித்து ஒப்படைப்பு மகஜரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நகராட்சி அலுவகத்திற்கு சென்ற பின்பு தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் மற்றும்

எங்கள் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்ட ஒப்படைப்பு மகஜர் ஆகியவற்றின் நகலை எங்கள் மேலதிகாரிகளுக்கு அன்றைய தினம் அனுப்பப்பட்டதா என்றால் அனுப்புவது வழக்கம் இல்லை. எங்கள் கையேட்டில் மேற்கண்ட ஆவணங்களை அனுப்பவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றால் இல்லை. முதல் அறிக்கை மட்டும் அனுப்புவது வழக்கம்.

ஒப்படைப்பு மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை அலுவலக மடிக்கணினி மூலம் தயார் செய்யும்போது அதற்கென மின் கோப்புகள் உருவாக்கப்பட்டு அதில் சேமித்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு பிந்தைய புலன்விசாரணை அதிகாரி எனது மடிக்கணினியை வாங்கி மேற்கண்ட விபரங்களை சரிபார்த்தாரா என்றால் அது வழக்கம் இல்லை. அது சம்பந்தமான கோப்புகளை பேப்பர் வடிவத்தில் ஒப்படைத்து விட்டேன். அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தின் அமைப்பு தற்போது எனக்கு ஞாபகத்தில் உள்ளதா என்றால் தற்சமயம் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் தயார் செய்த வரைபடத்தின்படி அருப்புக்கோட்டை பந்தல்குடி ரோட்டின் கீழ்ப்புறமாக நகராட்சி அலுவலகம் அமைந்துள்ளது என்றால் சரிதான். இரண்டு பிரதான வாசலில் இருந்து சுமார் 100 அடி தூரத்தில் அறிஞர் அண்ணா மாளிகை மற்றும் மகாத்மா காந்தி மாளிகை என்றும் இரண்டு கட்டிடங்கள் உள்ளது என்றால் தூரம் சரியாக சொல்ல இயலாது. 1ம் எதிரி பணி செய்யும் அலுவலக பிரிவு அறிஞர் அண்ணா மாளிகை கட்டிடத்தில் அமையப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொறியாளர் அலுவலக பிரிவும், ஆணையர் அறையும் வரைபடத்தில் 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்து காட்டப்பட்டுள்ளது என்றால் ஆணையரது அறை 2 ஆக காட்டப்பட்டுள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய பொறியாளர் அலுவலக அறையில் உள்ள இடம் 1 ஆக காட்டப்பட்டுள்ளது. மேலும் பல பிரிவு அலுவலகங்கள் பல இடங்களில் அமைந்துள்ளதை எனது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

நகராட்சி அலுவலகத்திற்கு அன்றைய தினம் சென்றபின்பு நகராட்சி

அலுவலக வளாகத்திற்குள் சிசிடிவி அமைப்புகள் பொருத்தப்பட்டுள்ளதா என்பதை வரைபடம் தயார் செய்வதற்கு முன்பு தெரிந்துகொண்டேனா என்றால் அதுபற்றி தெரிந்துகொள்ளவில்லை. சம்பவ சமய காலத்தில் நகராட்சி அலுவலகத்தில் சிசிடிவி அமைப்புகள் பொருத்தப்பட்டுள்ள விபரங்கள் அடங்கிய புகைப்பட தொகுப்புகளை என்னிடம் காண்பித்தால் அதுபற்றி சாட்சி கூறமுடியுமா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

இந்த வழக்கு விசாரணை முடிவடைந்து எதிரிக்கு நகல் வழங்கியபின்பு நகராட்சி அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி அமைப்பு பதிவுகளை வழங்கிடுமாறு நகராட்சி அலுவலகத்திற்கு 1ம் எதிரி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் எதிரி கொடுத்த மனுவின் பேரில் நகராட்சி அலுவலகத்திலிருந்து பதில் கொடுக்கப்பட்டது என்றும், அந்த பதிலில் நான் மேற்படி பதிவுகளை கைப்பற்றிக்கொண்டு சென்றுவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது.

விசாரணை நீதிமன்றத்தில் 1ம் எதிரியால் மேற்படி சிசிடிவி பதிவுகளை எங்களிடமிருந்து ஆஜர்படுத்துவதற்கு மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். 1ம் எதிரி குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்ககோரி Cr.M.P. 1170/2021 மனு தாக்கல் செய்யப்பட்டு 06.08.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் ஆவணங்களை பார்த்துதான் சொல்லமுடியும்.

என் மீதும், எனக்கு பிறகு புலன்விசாரணை செய்த அதிகாரிகள் மீதும் சிசிடிவி பதிவுகளை மறைத்த வகைக்கும், பொய்யாக வழக்கு பதிவு செய்த வகைக்கும் என் மேலதிகாரிகளிடம் 1ம் எதிரி மனு கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம், மதுரை கிளையில் 1ம் எதிரியானவர் நீதிப்பேராணை மனு எண் WP (MD) 19734/2022 என்ற மனுவும்,

Crl.RC.810/2022 மற்றும் Crl.OP.15293/2022 என்ற மனுவினையும் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். விசாரணை நீதிமன்றத்தில் மேற்படி மனுவின் சாராம்சங்கள் குறித்து 1ம் எதிரி பரிகாரம் தேடிக்கொள்ளலாம் என்றும், 6 மாத காலத்திற்குள் விசாரணை முடிக்கப்படவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மனுக்கள் முடிக்கப்பட்டது என்றால் சரிதான். சிசிடிவி அமைப்புகளை நகராட்சி அலுவலகத்திலிருந்து விதிமுறைகளுக்கு புறம்பாக கைப்பற்றிக்கொண்டு சென்றுவிட்டோம் என்றால் சரியல்ல.

நகராட்சி அலுவலகத்திற்குள் 1ம் எதிரி பணிபுரிந்த அறைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்று குறிப்பிட்டு நேரம் சொல்ல முடியுமா என்றால் சொல்ல இயலாது. சுமாரான நேரம் சொல்ல இயலுமா என்றால் சுமார் 4.45 மணி இருக்கும்.

காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களுக்கு நான் தகவல் சொன்ன நேரம் சுமார் 4.45 மணி என்றால் சரிதான். எதிரியிடம் கரைசல் பரிசோதனை நடத்தியபிறகும், விசாரணை செய்த பிறகும், பணம் கைப்பற்றிய பிறகும் தான் துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் சொல்ல வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

2ம் எதிரியை நகராட்சி அலுவலக வளாகத்தில் பிறப்பு இறப்பு சேவை மையம் அமைந்துள்ள பகுதி அருகே வரவழைக்கப்பட்டு இவ்வழக்கில் பவுடர் தடவிய நோட்டுக்களை வலுக்கட்டாயமாக 2ம் எதிரியின் கையில் திணிக்கப்பட்டு 1ம் எதிரி அமர்ந்திருந்த அறைக்கு அழைத்து செல்லப்பட்டார் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு 1ம் எதிரியின் அறைக்கு செல்லும்போது 2ம் எதிரி அங்கு இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1ம் எதிரியின் அலுவலக அறையில் வைத்து கரைசல் பரிசோதனை நடத்தப்படவில்லை என்றால் சரியல்ல. அதன் பின்தொடர்ச்சியாக பவுடர் தடவிய நோட்டுக்களை 2ம் எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்கண்ட நடவடிக்கை குறித்து நகராட்சி அலுவலகத்தில் பணியில் இருந்த

ஊழியர்கள் யாரும் சாட்சிகளாக இருப்பதற்கு அழைக்கப்பட்டதாக என்னுடைய கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரியின் அறையில் இதர அலுவலகர்கள் இல்லாததால் அவர்களை சாட்சியாக அழைக்கவும் இல்லை. கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடவும் இல்லை.

கரைசல் பரிசோதனை நடத்துவதற்கு முன்பாக அதே வளாகத்தில் அமைந்துள்ள மற்ற அலுவலகர்கள் யாரையும் சாட்சியாக இருப்பதற்கு அழைத்தீர்களா என்றால் அழைக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போன்று கரைசல் பரிசோதனை 2ம் எதிரியிடம் நடத்தப்படவில்லை என்றும், அதனால் தான் நகராட்சி அலுவலகத்தில் இருந்த ஊழியர்களை சாட்சியாக இருக்குமாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

என்னுடன் பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கைக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து வந்த காவலர்களின் பெயர்கள் தெரியுமா என்றால் தற்சமயம் ஞாபகம் இல்லை. கைப்பற்றுதல் மகஜரை தயார் செய்ய ஆரம்பித்தபோது சுமார் 5.30 மணி இருக்கும்.

2ம் எதிரியின் வீட்டிற்கு சென்று மாற்று உடை வாங்கி வரவே 1 மணி நேரம் ஆகும் என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிரியின் வீட்டிற்கு மாற்று உடை வாங்குவதற்கு சென்றவரின் பெயர் என்ன என்றால் நகராட்சி ஊழியர்தான் கொண்டுவந்தார். அவர் பெயர் தற்போது ஞாபகம் இல்லை.

கரைசல் பரிசோதனை நடவடிக்கை தொடங்குவதற்கு முன்பாக 1 மற்றும் 2ம் எதிரிகளின் செல்போன்களை கைப்பற்றினோமா என்றால் கைப்பற்றவில்லை. கரைசல் பரிசோதனை தொடங்கிபிறகு எதிரிகளை கைது செய்யும் வரை எதிரிகளின் செல்போன் கைப்பற்றினோமா என்றால் கைப்பற்றவில்லை. அவ்வாறு செல்போன்களை கைப்பற்றுவதற்கு அறிவுரைகள் மேல் அதிகாரிகளால் எங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் வழக்கு நடவடிக்கைக்கு தேவைப்படும் பட்சத்தில் கைப்பற்றுமாறு கூறப்பட்டுள்ளது. செல்போன் அழைப்பு பதிவுகளை பார்வையிடும் பட்சத்தில் கரைசல்

பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட காலம் பொய்யானது எனத் தெரியவரும் என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கு மாற்று உடை எதுவும் கொண்டுவரப்படவில்லை என்றால் சரியல்ல. 5.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் சுமார் இரவு 7.00 மணிக்கு முடிவடைந்தது என்றால் சரிதான். கைப்பற்றுத் மகஜரில் கூறப்பட்டுள்ள விசயங்கள் அந்த அந்த நிகழ்வுகள் வாரியாக பதிவு செய்யப்பட்டதா அல்லது மொத்தமாக பதிவு செய்யப்பட்டதா என்றால் நிகழ்வுகள் முடித்தபின்பு மொத்தமாக பதிவு செய்ய ஆரம்பிக்கப்பட்டது.

அசாஆ 6 கைப்பற்றுதல் மகஜர் 8 பக்கங்கள் உள்ளதாகும் என்றால் சரிதான். அதனை நான் சொல்ல சொல்ல என்னுடைய பிரிவு காவலர் கணினியில் பதிவு செய்தார் என்றால் சரிதான். 8 பக்கங்கள் கொண்ட ஆவணத்தை சொல்ல சொல்ல தட்டச்சு செய்து பிரதி எடுக்க சுமார் 2 மணி நேர அவகாசம் எடுக்கும் என்று சொன்னால் சரியல்ல. அசாஆ 6 ஆவணத்தை முழுமையாக படிப்பதற்கு சுமார் 1 மணி நேரம் ஆகும் என்று சொன்னால் சரியல்ல. அசாஆ 6 ல் கையொப்பம் செய்த நபர்கள் அனைவரும் அதனை முழுமையாக படித்துப்பார்த்தபின்பு தான் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். அசாஆ 6 ஆவணம் தயார் செய்வதற்கும், அதில் 1 முதல் 7 பக்கங்களில் கையொப்பம் இட்ட 3 நபர்கள் படித்துப்பார்க்க ஒவ்வொருவருக்கும் சுமார் 1 மணி நேரம் ஆகும் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் 5.30 மணி முதல் 7.00 மணிக்குள் அசாஆ 6 ஆவணம் தயார் செய்ய இயலாது என்றால் சரியல்ல.

நகராட்சி அலுவலகத்திலிருந்து 2ம் எதிரியின் வீட்டிற்கு செல்ல சுமார் 15 நிமிடம் ஆகும் என்று சொன்னால் சரிதான். 2ம் எதிரியின் வீட்டிலிருந்து அவரது ஆடைகளை வாங்கி வருவதற்கு சுமார் 45 நிமிடம் ஆகும் என்றால் சரியல்ல.

சா.பொ.2 வரிசையில் உள்ள கரைசல் பாட்டில்களில் லேபிள் ஒட்டுவதற்கும் 2ம் எதிரியிடம் கையொப்பம் வாங்குவதற்கும், நூல் சுற்றி சீல்

வைப்பதற்கும் சுமார் 30 நிமிடம் ஆகும் என்றால் சரியல்ல. சா.பொ.2 வரிசையில் உள்ள பாட்டில்களில் 1ம் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். சா.பொ.2 வரிசையில் உள்ள பாட்டில்களில் உள்ள கரைசல்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

பார்வை மகஜர் மற்றும் வரைபடம் ஆகியவற்றை தயார் செய்ய 15 நிமிட அவகாசம் போதுமானது அல்ல என்றால் சரியல்ல. வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்த பிறகு வழக்கு சம்பந்தமாக வேறு ஆவணங்கள் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். 1மற்றும் 2ம் எதிரிகளை விசாரித்தேனா என்றால் விசாரித்து கைப்பற்றுதல் மகஜரில் பதிவு செய்துள்ளேன். தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை.

ஊழல் தடுப்பு கையேட்டின் படி தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. விசாரிக்கவேண்டும் என்றுதான் உள்ளது. 1ம் எதிரி எனது விசாரணையின் போது தான் பணம் கேட்கவில்லை என்றும், நகராட்சி நிதி நிலை காரணமாக மூப்புப்பட்டியலின் படி வைப்புத்தொகை திரும்ப வழங்கப்படும் என்றும், அந்த காலகட்டத்தில் நகராட்சி நிதிநிலையில் வழக்கு சம்பந்தப்பட்ட வைப்பு தொகையை திரும்ப கொடுக்க இயலாத நிலையில் இருந்தது என்றும், அதனால் சில ஒப்பந்தகாரர்களின் தூண்டுதலின் பேரில்புகார் கொடுக்கப்பட்டதாக வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

2ம் எதிரியின் வீட்டில் சோதனை நடந்து முடிந்தபிறகு 8.45 மணிக்கு எங்கள் பிரிவு அலுவலகத்திற்கு அழைத்து செல்லப்பட்டு, நிலைய பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, 1ம் எதிரியின் வீட்டில் சோதனை நடவடிக்கைக்கு அழைத்து செல்லப்பட்டார் என்றால் சரிதான். நிலையத்தில் பதிவு செய்ய வேண்டிய ஆவணங்களை தயார் செய்ய 1 மணி நேரம் ஆகும் என்று சொன்னால் சரியல்ல.

விருதுநகர் அலுவலகத்திலிருந்து திருவில்லிபுத்தூரில் உள்ள 1ம்

எதிரியின் வீட்டிற்கு செல்ல சுமார் 1மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். 1ம் எதிரியின் வீட்டில் மதிப்பு மிக்க பொருட்களோ, ரொக்கமோ, சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்களோ இல்லை என்று சொன்னால் சரிதான்.

அதன்பின்னர் 1ம் எதிரியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்க எவ்வளவு கால அவகாசம் ஆகும் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்லமுடியும். நான் சொன்னதுபோல சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் 1ம் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், மேற்படி 1ம் எதிரி சம்பந்தப்பட்ட ஆவணங்களை சொன்ன விதத்தில் தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

அருப்புக்கோட்டை நகராட்சியில் மார்ச் மாதம் 25ம் தேதிக்கு பின்பாக நிதி ஆண்டு நிறைவு காரணமாக பணப்பட்டுவாடா சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் மத்திய அலுவலகத்தில் கணினியின் இயக்கம் நிறுத்தப்பட்டுவிடும் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது.

அசா 2க்கு நிலுவைத்தொகை எப்போது பட்டுவாடா செய்யப்பட்டது என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. அசா 2 க்கு நிலுவைத்தொகையை பட்டுவாடா செய்ய இயலாது என்று எனக்கும் தெரியும் என்றால் சரியல்ல.

இந்த வழக்கு முதல் தகவல் அறிக்கை, பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை ஆகியவை முறையாக மேற்கொள்ளவில்லை என்றும், ஒரு தலைபட்சமாக நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகார்தாரர் சோமசுந்தரம் கொடுத்த புகாரில் 2ம் எதிரியின் பெயரையோ, அவர் லஞ்ச பணம் கேட்டதாகவோ இல்லை என்றால் பெயர் உள்ளது. லஞ்ச பணம் கேட்டதாக இல்லை. 02.04.2018 அன்று மாலை 4.00 மணிக்கு அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு செல்லும்போது நான் நேரடியாக 1ம் எதிரியின் அலுவலகத்திற்குள் செல்லவில்லை என்றால் சரிதான். சைகை

கிடைத்தபின்புதான் 1ம் எதிரியின் அலுவலக அறைக்குள் சென்றேன். 1ம் எதிரியின் அலுவலக அறையின் கதவானது பாதி கண்ணாடியால் ஆனது என்றால் சரிதான். ஒரு ஆள் வெளியில் நின்று கொண்டு உள்ளே என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று கேட்கமுடியுமா என்றால் கதவு அடைக்கப்பட்டிருந்தால் கேட்கமுடியாது.

அசா 2 மற்றும் சாட்சி வனத்துரை ஆகிய இருவரும் 1ம் எதிரியின் அறைக்கு சென்றபின்பு 1ம் எதிரியின் அறை பூட்டப்பட்டிருந்ததா, திறந்திருந்ததா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அசா 2 மற்றும் அசா 3 ஆகிய சாட்சிகள் எனக்கு சைகை தெரிவித்த பின்பு நான் அவர்களை விசாரித்ததாகவும், அவர்கள் இருவரும் நாங்கள் 1ம் எதிரியின் அறைக்குள் செல்லும்போது, 1ம் எதிரி பணத்தை பற்றி அசா 2 யிடம் கேட்டதாகவும், 1ம் எதிரி அசா 2 யிடம் பணம் ரூ. 25 ஆயிரத்தை 2ம் எதிரியிடம் கொடுக்குமாறு சொன்னதாகவும் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

1ம் எதிரி, 2ம் எதிரியிடம் நான் கேட்ட லஞ்ச பணம் ரூ. 25 ஆயிரத்தை வாங்கி வைத்து பின்னர் என்னிடம் கொடுங்கள் என்று என்னிடம் அசா 2 மற்றும் அசா 3 சொன்னது பொய் என்றால் சரியல்ல.

2ம் எதிரி அசா 2 யிடம் பணத்தை பெற்றவுடன் பணத்தை எண்ணிப்பார்த்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரை நாங்கள் கொண்டு சென்ற மடிக்கணினியில் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கைப்பற்றுதல் மகஜரை யார் தயார் செய்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. அப்போது அலுவலகத்தில் எனக்கு கீழ் பணிபுரிந்த காவலர் தான் தயார் செய்தார். நாங்கள் கொண்டு சென்ற அலுவலக மடிக்கணினியின் பிராண்ட் மற்றும் கம்பெனியின் பெயர் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. கைப்பற்றுதல் மகஜரை தயார் செய்த காவலர் 65 பி சாட்சிய சட்டத்தின் படி சான்றிதழ் ஏதேனும் அளித்தாரா என்றால் மேற்படி மகஜரானது நான் சொல்ல சொல்ல என் முன்னால் அவரால் தயார் செய்யப்பட்டு பிரதி

எடுக்கப்பட்டதால் அவ்வாறு சான்றிதழ் பெறவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவ்வாறு கைப்பற்றுதல் மகஜரை தயார் செய்த காவலரிடம் 65 பி சாட்சிய சட்டத்தின்படி சான்றிதழ் அவசியம் பெறவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

1ம் எதிரியின் அறையும் 2ம் எதிரியின் அறையும் தனித்தனியானவை என்றால் சரிதான். 2ம் எதிரியை நான் விசாரிக்கும்போது அவர் எதற்காக 1ம் எதிரியின் அறைக்கு வந்தேன் என்ற விபரத்தை சொல்லியுள்ளாரா என்றால் ஏதேட்சையாக வந்ததாக சொன்னார். எந்த வேலைக்காக 1ம் எதிரியை பார்க்க வந்தேன் என்பதை சொல்லவில்லை.

பொறிவைப்பு நடவடிக்கை நடைபெற்ற நாளில் 2ம் எதிரி அருப்புக்கோட்டை நகராட்சியில் பட்ஜெட் தயார் செய்வதில் முனைப்பாக இருந்தார் என்றாலும், 1ம் எதிரியின் அறைக்கு 2ம் எதிரி வரவேயில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

பொறிவைப்பு நடவடிக்கைக்காக அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்திற்குள் சென்றபின்பு 2ம் எதிரியை அவரது இருக்கையில் இருந்து 1ம் எதிரியின் அறைக்கு வரவழைத்து அசா 2ன் மூலமாக பணத்தை 2ம் எதிரியின் கையில் வலுக்கட்டாயமாக திணிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

2ம் எதிரியை மோட்டார் பம்ப் செட் அருகில் வரவழைத்து அசா 2 ன் மூலமாக அவரது கையில் பணம் திணிக்கப்பட்டது என்றும், அவர் அந்த பணத்தை கையில் பெற்றவுடன் வீசி எறிந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி நிகழ்வுகள் அனைத்தும் சிசிடிவி கேமராவில் பதிவுகளாக உள்ளன என்றும் , அந்த பதிவுகளை கைப்பற்றிய நான் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பதிவுகள் உள்ளதால் நான் அதனை திட்டமிட்டு மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் 2ம் எதிரி பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. அசா 2 மற்றும் அசா 3 சாட்சிகள் என்னிடம் 1ம் எதிரி, 2ம் எதிரியிடம் கூடுதல் காப்புத்தொகை பணத்தை அசா 2யிடம் திரும்ப கொடுப்பதற்கு

கோப்புகளை தயார் செய்யுமாறு கூறினார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் நான் சொன்னதுபோல் 2ம் எதிரிக்கு எதிராக தயார் செய்த ஆவணங்கள் அனைத்தும் நான் சொன்னதுபோல் சொன்ன விதத்தில் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.